<u>**DEPOSITION OF WITNESS**</u>
<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness : **38**

| | | | |
|---|---|---|---|
| Name: | **அசன்முகம்மதுமுகைதீன்** | Caste: | |
| Father'sName: | முகம்மது பீர் முகைதீன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A2,A3, A12, A19, A24 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **13.03.2023**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தென்காசியில் அணைக்கரை தெருவில் குடியிருக்கிறேன். நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். நான் ஜவுளி வியாபாரத்திற்காக எமகா RXZ, TN 72 X 0558 என்ற வாகனம் வைத்திருந்தேன். 2005 ம் ஆண்டு அந்த வாகனத்தை தென்காசி, விஜய் ஆட்டோ என்ற நிறுவனத்தில் பரிமாற்றம் செய்து ரூ.16,300/-க்கு விற்றுவிட்டேன். ே ஹாண்டா CBZ என்ற வாகனத்தை எடுத்தேன். நான் விற்பனை செய்த விபரத்தை வட்டார போக்குவரத்து அலுவலருக்கு தகவல் தெரிவிக்கவில்லை. 2005 ம் ஆண்டு வரை அந்த வாகனம் என் பெயரில் தான் இருந்தது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்ததார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சொந்தமான TN 72 X 0558 என்ற மோட்டார் சைக்கிளை பரிமாற்றம் செய்தபோது அதை விஜய் ஆட்டோ மொபைல்ஸ்க்கு ஒப்படைத்ததற்கு ஒப்புகை சீட்டு பெற்றேன். அது தற்போது என் கைவசம் இல்லை. நான் புதிதாக கிரையம் பெற்ற கோண்டா CBZ அதன் பதிவெண் TN 72 3571 ஆகும். வரிசை எண் ஞாபகம் இல்லை. விஜய் ஆடடோ மொபைல்சில் நான் பரிமாற்றம் செய்தேனா இல்லையா என்று அவர்களை விசாரித்தால் தெரிந்துவிடும். நான் விஜய் ஆடடோ மொபைில் பரிமாற்றம் செய்ததாக கூறுவது பொய் என்றும் அதனால் தான் அது தொடர்பான ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் 2007 ம் ஆண்டு சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது மேற்படி வாகனத்தை தென்காசி மவுண்டரோடு மீரான் மைதீன் என்ற மைதீன் மகன் அலாவுதீனுக்கு கடந்த 24.09.2005 ம் தேதி ரூ.14,300/-க்கு விற்றுவிட்டேன் என்றும் ஆனால் அதுசம்பந்தமான ஆவணங்களை பெயர் மாற்றம் செய்யவில்லை என்றும் கூறியிருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மீரான் மைதீன் என்ற மைதீன் மகன் அலாவுதீனை தெரியும். ஆஜர் எதிரிகளில் சேட் என்ற அயுபை தெரியும். மற்றவர்களை தெரியாது.

மீரான் மைதீன் மகன் அலாவுதீனுக்கு வண்டியை விற்றேன் என்றும் அவரை காப்பாற்றும் நோக்கில்  பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**